Registered as a Newspaper

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 253

திங்கட்கிழமை
05 ஓகஸ்ட் 2024

ஆடி 20 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

**முச்சந்தி முராரி**



"வாக்களிக்கப்போற ஆக்களை விட எலக்சன் கேக்கிற ஆக்கள் கூடவா இருக்கப் போயினம் போல"

## இளைஞனின் சாவில் சந்தேகம்:
### உடற்கூற்றுப்பரிசோதனை மேற்கொள்ளப் பணிப்பு

வவுனியா, ஓக. 5
மகாறம்பைக்குளம் தாஸ்நகரில் சடலமாக மீட்கப்பட்ட இளைஞனின் சாவில் சந்தேகம் இருப்பதால் அவரது சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு வவுனியா நீதிவான் உத்தரவிட் ☞ 11

## மூவரை சுட்டுக்கொன்ற பொலிஸ் கொன்ஸ்டபிள்



### தன்னைத்தானே சுட்டு அவரும் தற்கொலை

அம்பாறை, ஓக. 5
அம்பாறை மாவட்டம், இகினியாகல நாமலோய பிரதேசத்தில் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் மற்றுமொரு கொன்ஸ்டபிளையும், தனது மனைவி, மாமியாரையும் சுட்டுக் கொன்றுள்ளதாக அம்பாறை பொலிஸார் தெரிவிக்கின்றனர். நேற்று அதிகாலை 2 மணியளவில் துப்பாக்கிச் ☞ 11

## 4 தலைவர்களை நீக்கியது மொட்டு!

கொழும்பு, ஓக. 5
சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களான பிரசன்ன ரணதுங்க, எஸ்.எம்.சந்திரசேன, காஞ்சன விஜயசேகர, ரமேஷ் ☞ 11

## திலீத் ஜயவீரவும் தேர்தல் களத்தில்!

கொழும்பு, ஓக. 5
சர்வஜன அதிகாரம் கூட்டணியின் வேட்பாளராக பிரபல தொழிலதிபர் திலீத் ஜயவீர நியமிக்கப்பட்டுள்ளார்.
கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற சர்வஜன அதிகாரம் கூட்டணியின் மாநாட்டியே இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஓ-இ)

# தமிழ்ப் பொதுவேட்பாளர் யார்? இன்று பெயர் விவரம் அறிவிப்பு!

### தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த அரியநேந்திரனுக்கு வாய்ப்பு அதிகம்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 5
**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கவுள்ள பொதுவேட்பாளர் யார் என்ற விவரம் இன்று அறிவிக்கப்படவுள்ளது. வேட்பாளர் பெயர்ப் பட்டியலில் 3 பேரின் பெயர்கள் இறுதிப்படுத்தப்பட்டாலும் இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அரியநேந்திரனுக்கே வாய்ப்பு அதிகம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.** ☞ 11


### தமிழ்ப் பொதுவேட்பாளர்:
## 5 புலம்பெயர் அமைப்புகள் ஆதரவு

கொழும்பு, ஓக. 5
எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவதற்குத் தீர்மானித்துள்ளமையை வரவேற்பதாகவும், இதன்மூலம் தமிழ் மக்கள் தமது அரசியல் அபிலாஷைகளையும், கோரிக்கைகளையும் ஜனநாயக முறையில் உலகறியச் ☞ 11

## பொலிஸ்மா அதிபர் விவகாரம்: கைவிரித்தார் சபாநாயகர்!



கொழும்பு, ஓக. 5
பொலிஸ்மா அதிபர் விவகாரம் தொடர்பில் பிரதம நீதியரசருடன் கலந்துரையாடப் போவதில்லை என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.
இந்த விடயம் தொடர்பில் பிரதம நீதியரசருடன் கலந்துரையாடுவதற்கு சட்டரீதியான அடிப்படை ☞ 11



## நிபந்தனைகளுடன் சஜித்துக்கு ஆதரவு
### முஸ்லிம் காங்கிரஸ் அறிவிப்பு

கொழும்பு, ஓக. 5
ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு நிபந்தனைகளின் அடிப்படையில் ஆதரவளிப்பதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது. முஸ்லிம் காங்கிரஸின் அதி உயர்பீடக் கூட்டம் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் ☞ 11

### தமிழ் முற்போக்கு கூட்டணியும்
## சஜித்துக்கே ஆதரவு!

கொழும்பு, ஓக. 5
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மலையக மக்கள் முன்னணி, தமிழ் முற்போக்குக் கூட்டணியுடன் இணைந்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
ஹட்டனில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வேலுச்சாமி இராதாகிருஷ்ணன் இந்த அறிவிப்பை வெளியிட்டார். (அ-ஓ-இ)

### 45 நாள் பச்சிளம்பாலகனின்
## கை, கால்கள் முறிப்பு: தலைக் காயத்தால் சாவு
### பால்குடிக்க மறுத்ததாலேயே சித்திரவதை செய்ததாக தாயார் வாக்குமூலம்

யாழ்ப்பாணம், ஓக. 5
45 நாள் குழந்தையின் கைகள் மற்றும் கால்கள் முறிக்கப்பட்டு சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்ட குழந்தை உயிரிழந்த சம்பவம் தொடர்பாக குழந்தையின் தாய் தெல்லிப்பழைப் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.
மேலும், சம்பவம் தொடர்பில் குழந்தையின் தாயை வளர்த்த இருவரையும் குழந்தையின் தந்தையும் தெல்லிப்பழைப் பொலிஸார் ☞ 11

## வீட்டாரை அச்சுறுத்தி 'டிப்பர்' கொள்ளை
### மடக்கிப்பிடித்த பொலிஸார்

கிளிநொச்சி, ஓக. 5
வீட்டுக்குள் நுழைந்த 15பேர் கொண்ட வன்முறைக் கும்பல் அங்கிருந்தோரை அச்சுறுத்தி கொள்ளையடித்துக் கொண்டு சென்ற டிப்பரை பொலிஸார் மடக்கிப் ☞ 11

மக்கள் [illegible] தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ரோஹிதவும் ரணில் பக்கம்

வவுனியா, ஓக.5
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியைப் பலப்படுத்துவதற்காக புதிய தேசிய ஏற்பாட்டாளராக நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தனவும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.
ராஜபக்சக்களின் மிகவும் நெருங்கிய சகாவாக ரோஹித அபேகுணவர்தன கருதப்பட்டார். மொட்டுக் கட்சியின் களுத்துறை மாவட்ட தலைவராகவும் அவர் செயற்பட்டார்.
இந்த நிலையில்கட்சியைவிட நாடுதான் முக்கியம் எனக்கருதியதால் ஜனாதிபதி தேர்தலில் ரணிலுக்கு ஆதரவு வழங்கும் முடிவை எடுத்ததாக அவர் அறிவித்துள்ளார். (ச-இ)

# சரியும் வாக்குவங்கி மொட்டு பிரயத்தனம்

கொழும்பு, ஓக. 5
**ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் அரசியல் தளபதிகளென அந்தக் கட்சி ஆதரவாளர்களால் கருதப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் பக்கம் சாய்ந்துள்ளதால் சிங்கள, பௌத்த வாக்கு வங்கிகளைக்கொண்ட பிரதான மாவட்டங்களின் அதிகாரத்தை மொட்டுக்கட்சி இழந்து வருகிறது.**

இந்நிலையில் தமது இருப்பை தக்கவைத்துக்கொள்வதற்குரிய வியூகங்களை பஸில் ராஜபக்ச, நாமல் ராஜபக்ச உள்ளிட்டவர்கள் வகுத்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.
தேசிய மட்ட தேர்தலுக்குரிய பரப்புரை அநுராதபுரம் மாவட்டத்திலிருந்தே மஹிந்த ராஜபக்ச ஆரம்பிப்பது வழமை. எனினும், அந்த மாவட்டத்தின் கட்சித் தலைவர் எஸ்.எம். சந்திரசேன ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு வழங்கியுள்ளார். இதனால் அநுராதபுர மாவட்டத்தில் தேர்தலை வழிநடத்தும் பொறுப்பை மொட்டுக் கட்சி, தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச விடம் கையளித்துள்ளது.
அதிகளவு வாக்காளர்களைக் கொண்ட கம்பஹா மாவட்ட மொட்டுக் கட்சித் தலைவர் பிரசன்ன ரணதுங்கவும் ரணிலுக்கு ஆதரவாக தீவிர பரப்புரையில் ஈடுபட்டுவருவதால், கம்பஹா மாவட்ட இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்தவிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்றும் தெரியவருகிறது. (ச-44)

# ஐக்கிய மக்கள் கூட்டணி குருநாகலில் பரப்புரை

கொழும்பு, ஓக. 5
சஜித் பிரேமதாஸ தலைமையில் எதிர்வரும் 8 ஆம் திகதி மலரவுள்ள ஐக்கிய மக்கள் கூட்டணியின் முதலாவது தேர்தல் பரப்புரைக் கூட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி குருநாகலையில் நடைபெறவுள்ளது.
ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு, ஐக்கிய மக்கள் கூட்டணியால் மிகவும் பிரமாண்டமான முறையில் முன்னெடுக்கப்படும் முதலாவது தேர்தல் பரப்புரைக் கூட்டம் இதுவாகும்.
ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுவை எதிர்வரும் 15 ஆம் திகதி தாக்கல் செய்த பின்னர் மறுநாள் பரப்புரையை சஜித் ஆரம்பிக்கவுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-44)



## வவுனியாவில்
# ஐ.தே.கட்சியினர் மக்கள் சந்திப்பு

வவுனியா, ஓக.5
முன்னாள் நிதியமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவருமான ரவி கருணாநாயக்க வவுனியாவில் உள்ள விருந்தினர் விடுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மக்கள் சந்திப்பில் ஈடுபட்டார்.
இதில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஏன் மக்கள் ஆதரிக்கவேண்டும் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக கருத்துரைகளை வழங்கியிருந்தார்.
நிகழ்வில் கட்சி ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர் (ச-110)

# எதிராகச் செயற்படின் உறுப்புரிமை 'கட்'!


## பெரமுன எச்சரிப்பு

கொழும்பு , ஓக. 5
ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கட்சி முடிவுக்கு எதிராகச் செயற்பட்டு கட்சி அல்லாத வேறு ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆதரவு வழங்கினால் கட்சி உறுப்புரிமை இரத்துச் செய்யப்படும் என பொதுஜன பெரமுனக் கட்சி மீண்டும் வலியுறுத்தியுள்ளது.
இது தொடர்பில் கட்சியின் பொதுச் செயலாளரால் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களுக்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதேவேளை மொட்டுக் கட்சியின் கண்டி மாவட்டக் குழுவும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது. (ச-22-44)



# இருமுனையில் ரணில்-பஸில்

கொழும்பு, ஓக. 5
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் மேலும் சில நாடாளுமன்ற உறுப்பினர்களை வளைத்துபோடுவதற்குரிய நகர்வுகளில்ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க ஈடுபட்டுவருகின்றார் எனத் தெரியவருகின்றது.
எதிர்வரும் 15 ஆம் திகதிக்குள் மேலும் 10 எம்.பி.க்கள்வரை ரணில் பக்கம் செல்வார்கள் எனவும், மொட்டுக் கட்சியிலிருந்து சுமார் 100 எம்.பி.க்கள்வரை ரணிலை ஆதரிக்கவுள்ளனர் எனவும் அறியமுடிகின்றது.
அதேவேளை மொட்டுக் கட்சி எம்.பி.க்களை தமது பக்கம் தக்கவைத்துக்கொள்வதற்கும், ரணில் பக்கம் சென்றவர்களை மீள வளைத்துபோடுவதற்கும் பஸில் ராஜபக்ச நேரில் களமிறங்கியுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது. (ச-44)



# 1.71 கோடி வாக்காளர்கள் இம்முறை வாக்களிக்கத் தகுதி

## தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, ஓக.5
இம்முறை மொத்தமாக ஒரு கோடியே 71 இலட்சத்து 40 ஆயிரத்து 280 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். வருடாந்தம் சுமார் 2 இலட்சம் புதிய வாக்காளர்கள் இணைந்துகொள்ளப்படுவர்.
அந்தவகையில் 2019 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கிட்டத்தட்ட 10 இலட்சம் புதிய வாக்காளர்கள் வாக்காளர் இடாப்பில் இணைந்துள்ளனர்.
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன்ஸ்ரீ ரத்நாயக்க இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.
நாட்டின் அடுத்த ஜனாதிபதியாக போகிறவர் யார் என்பதை தெரிவு செய்வதற்கான உரிமை மக்களுக்கு உண்டு. வாக்காளர்கள் சிந்தித்து தீர்மானம் எடுப்பது முக்கியமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# 25 எம்.பி.களதும் ஆதரவு யாருக்கு?

கொழும்பு, ஓக. 5
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிவரும் நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் யாருக்கு ஆதரவளிப்பதென முடிவுகளை வெளியிட்டு வருகின்றனர்.
அந்தவகையில் தற்போதைய நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 28 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் 9 பேர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளனர்.
அதன்படி டக்ளஸ் தேவானந்தா, கு. திலீபன், ஜீவன் தொண்டமான், மருதபாண்டி ராமேஷ்வரன், வடிவேல் சுரேஷ், அரவிந்தகுமார், பிள்ளையான், வியாழேந்திரன், சுரேன் ராகவன் ஆகியோர் ரணிலுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.
தமிழ் முற்போக்குக் கூட்டணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 5 நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், வே.இராதாகிருஷ்ணன், பழனி திகாம்பரம், எம்.வேலுகுமார், எம்.உதயகுமார் ஐக்கியமக்கள்கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு நேசக்கரம் நீட்டுவதற்குத் திட்டமிட்டுள்ளனர்.
தமிழ்ப் பொதுவேட்பாளரைக் களமிறக்கும் முயற்சிக்கு 5 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர்.
மேலும் 7 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாருக்கு ஆதரவு என்பது பற்றி தமது நிலைப்பாட்டை இன்னும் அறிவிக்கவில்லை.
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்தும் இரு எம்.பி.க்களும், ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்க முடிவு செய்துள்ளனர். (ச-44)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பெண்களால் துன்புறுத்தல் ஆண்கள் முறையிடலாம்!

## பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவிப்பு

**கொழும்பு, ஓக. 5**

**பெண்களால் பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளாகும் ஆண்கள் அது தொடர்பில் முறைப்பாடுகளை வழங்கமுடியும் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.**

பெண்களால் ஆண்கள் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. பெண்களால் பாலியல் ரீதியில் துன்புறுத்தல்களுக்குள்ளாகும் பட்சத்தில் அது தொடர்பில் முறையீடு செய்ய வயதுவந்த ஆண்களுக்கும் சம உரிமை உள்ளது.

1995 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கத் தண்டனைச் சட்டத் திருத்தச் சட்டத்தின் 345 ஆவது பிரிவின் படி இத்தகைய குற்றச் செயல்கள் தொடர்பாகச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் ஆண், பெண் என்ற வேறுபாட்டைக் கருத்திற்கொள்வதில்லை. ஆண்களோ அல்லது சிறுவர்களோ பெண்களால்ஏதேனும்பாலியல்துன்புறுத்தலுக்கு உள்ளானால் உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துகொள்ள முடியும் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (அ-ம-66)



# இளம் தாய் உயிரிழப்புக்கு நீதியான விசாரணை தேவை

## *சார்ள்ஸ் எம்.பி. வலியுறுத்து*

கொழும்பு, ஓக. 5

மன்னார் மாவட்ட பொதுமருத்துவமனையில் அண்மையில் உயிரிழந்த இளம் தாயின் மரணம் தொடர்பில் நாடளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் நேற்றுமுன்தினம் நேரில் சென்று நீதியான விசாரணை இடம்பெறுகின்றதா என ஆராய்ந்துள்ளார். இதன்போது உயிரிழந்த பெண்ணின் உடற்கூற்றுப் பரிசோதனை கொழும்பில் நடைபெறுகிறது. முடிவுகளைப் பொறுத்தே சட்ட நடவடிக்கைக்குச் செல்வது தொடர்பாக முடிவெடுக்க முடியும் என்றும் மருத்துவமனைப் பணிப்பாளரால் தெரிவிக்கப்பட்டது. பெண்ணின் மரணம் தொடர்பான விசாரணைகள் பக்கச் சார்பற்றதாக இருக்கவேண்டும். எதிர்காலத்தில் இப்படியான சம்பவங்கள் இடம்பெறாத வகையில் பணியாற்றவேண்டும் என்றும் நாடளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் சுட்டிக்காட்டினார். (ச-56)

# அம்புலன்ஸ் சேவையை நடத்துங்கள்

வேரவில் பிரதேச மருத்துவமனையில் கடந்த ஓர் ஆண்டுக்கு மேலாக அம்புலன்ஸ் சேவை இடம்பெறாது காணப்படுகிறது. இதனால் நோயாளர்களை முழங்காவில், கிளிநொச்சி பொது மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடுகிறது என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இங்குள்ள ஆயிரம் வரையான குடும்பங்கள் இந்த மருத்துவமனையை நம்பியுள்ளன என்றும் மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ச-ரி-13)



# ஐ.தே.கட்சி அலுவலகம் கிளிநொச்சியில் திறப்பு

கிளிநொச்சி, ஓக.5

ஐக்கிய தேசியக் கட்சியின் கிளிநொச்சி கிளை அலுவலகம் ரவி கருணாநாயக்கவினால் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் மாகாணசபை முன்னாள் உறுப்பினரும் ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவருமான நல்லையா குமரகுருபரன் உள்ளிட்ட கட்சி ஆதரவாளர்கள் கலந்துகொண்டனர். (ச-25-113)

# வாள்வெட்டுத் தாக்குதல் 3 சந்தேகநபர்கள் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 5

சண்டிலிப்பாய் சந்தியில் கடந்தமாதம் இளைஞர் ஒருவரை வாளால் வெட்டித் தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் 3 சந்தேகநபர்கள் மானிப்பாய் பொலிஸாரால் கடந்த வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து வாள் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

மூன்று சந்தேகநபர்களும் வாளுடன் சண்டிலிப்பாய் பகுதியில் பயணித்தபோது கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை கோவில் ஒன்றில் நண்பர்களுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடே வன்முறைக்குக் காரணம் என ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ச-125)

# வல்வைப் படுகொலை நினைவேந்தல் நிகழ்வு

வல்வைப் படுகொலையின் 35 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வல்வெட்டித்துறை - ரேவடி கடற்கரை மைதானத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. 1989 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 2,3,4 ஆம் திகதிகளில் வல்வெட்டித்துறை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் இந்திய இராணுவத்தினரால் 63 தமிழ்மக்கள் கோரமாகப் படுகொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ரி-66)



# தினம் தெரியுமோ?

டாக்குத்தர் அர்ச்சுனா அரெஸ்ட் பண்ணுப்பட்டிருக்கிறார். தனக்குச் சம்பந்தமில்லாத ஆஸ்பத்திரிக்குள்ளபோய், அத்துமீறி நடந்ததாலையும், கடமைக்கு இடையூறு விளைவிச்சதாலையும் தான் அவரை அரெஸ்ட் பண்ணி, மறியலில போட்டிருக்காம். அர்ச்சுனா தன்ர கட்டுப்பாட்டுக்க இல்லாத ஒரு ஆஸ்பத்திரிக்குள்ள நுழைஞ்சது பிழைதான். ஆனால் எதுக்காக அவர் போனார் எண்டதிலதான் விசயம் இருக்கு; அந்த ஆஸ்பத்திரியில ஒரு இளம் பொம்பிளைக்கு குழந்தை பெத்த கொஞ்சநாளில இரத்தப்போக்கு வந்ததால, அவசரமா அவாவை இரவு நேரத்தில கொண்டந்து சேர்த்திருக்கினம். ஆனால் அவாவுக்கு இரத்தம் போறதை நிப்பாட்ட அங்க இருந்த டொக்டர்மாரும், நேர்ஸ்மாரும் பெரிசா முயற்சி எடுக்கேலை. கையில ஏதோ மிசினைப் போட்டிட்டு தங்கடபாட்டில போனுக்குள்ள புகுந்திட்டினம். பிறகு அந்தப் பிள்ளையின்ர தாய்க்காரி நேர்ஸ்மாரிட்டபோய் தன்ரபிள்ளையைக் காப்பாத்தச் சொல்லிக் கெஞ்சி இருக்கிறா. அதுக்கு நேர்ஸ்மார் 'எங்கட டியூட்டியைப் பாக்க எங்களுக்குத் தெரியும். நீங்கள் உங்கட அலுவலைப் பாருங்கோ' எண்டிருக்கினம். தாய்க்கு கோபம் வந்திட்டு. 'என்ர பிள்ளைக்கு எவ்வளவு ரத்தம் போகுதெண்டு உந்தப் போனில தெரியுமோ?' எண்டு கேட்டிருக்கிறா. அதில நேர்ஸ்மார் சூடாகிட்டினமாம். 'அவாக்கு மிசின் பூட்டியிருக்கு. நாங்கள் போன் பார்த்தாலும் அவாவையும் கவனிச்சுக்கொண்டு தான் இருக்கிறம். எங்கட வேலையில பிழை பிடிக்க வந்திட்டியளோ?' எண்டு பாய்ஞ்சு விழுந்திருக்கினம். அந்த அப்பாவித் தாயால அதுக்கு மிஞ்சி வேற என்ன செய்யமுடியும்? அவா பேசாமல் இருந்திட்டா.

விடிஞ்ச பிறகு டியூட்டி மாறி, வேற நேர்ஸ் ஆக்கள் வந்திருக்கினம். சத்தியவானை மீட்க சாவித்திரி போராடினமாதிரி, அந்தத் தாய் புதிசா வந்த நேர்ஸ் மாரிட்டயும் போய், 'என்ர பிள்ளைக்கு ஏலாமல் இருக்கு. இரவில நிண்டவை ஒழுங்காக் கவனிக்கேலை, நீங்களாவது கருணை காட்டுங்கோ' எண்டு கெஞ்சியிருக்கிறா. பகல் வந்த நேர்ஸ்மார், இரவு டியூட்டியில நிண்டவை மாதிரி எழுப்பம் காட்டாமல், அக்கறையாபோய் பார்த்திருக்கினம். ஆனால் அவைக்கு நிலைமை பிழை எண்டு தெரிஞ்சிருக்கவேணும். 'உங்கட மகளை போய் ரத்தத்தை கழுவிட்டு வரச் சொல்லுங்கோ அவசரமா' எண்டு கெதிப்பண்ணி இருக்கினம். மகளும் பாத்ரூமுக்க போய், ரத்தத்தை கழுவிப்போட்டு வரேக்க வழியிலையே மயங்கி விழுந்திட்டா. உடன ஆளை அவசர சிகிச்சைப் பிரிவுக்குள்ள கொண்டு போட்டினம். அந்த அறைக்குள்ள நேர்ஸ்மாரும் டொக்டர்மாரும் போய் வந்தபடி இருக்கினமே தவிர, என்ன நடக்குது எண்டு ஒண்டும் சொல்லேலையாம். பிறகுதான் 'உங்கட மகளை போய்ப் பாருங்கோ, நாங்களும் ஒண்டும் செய்யேலாது' எண்டு டொக்டர்மார் கையை விரிச்சிருக்கினம். 'ஐயோ என்ர பிள்ளையை கொண்டிட்டியளே' எண்டு அந்த அப்பாவித் தாய் அழுது குழறித் திட்டிப்போட்டுத்தான், மகளின்ர சடலத்தைப்பார்த்தவா.

இரவே நல்ல ட்ரீட்மெண்ட் குடுத்திருந்தால், அந்த இளம்பொம்பிளையைக் காப்பாத்தியிருக்கலாம். 'எல்லாம் எங்களுக்குத் தெரியும்' எண்ட திமிரும், போன் பார்க்கிற அவாதியும் சேர்ந்து அநியாயமா ஒரு உயிரைப் பறிச்சுப்போட்டுது. அந்தப் பிரச்சினை சம்பந்தமா விசாரிக்கத்தான் டாக்குத்தர் அர்ச்சுனா போய், இப்ப மறியலுக்குள்ள இருக்கிறார். அர்ச்சுனாவைப் பிடிக்கிறதில காட்டின அனுகுமுறையை, இப்பிடி அநியாயமா ஒரு உயிரைப் பறிச்ச ஆக்களில காட்டுவினமோ?

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திறப்புவிழா

கிளிநொச்சி, ஓக.5
கிளிநொச்சி மத்திய கல்லூரியில் திறன் வகுப்பறை திறப்பு விழா கல்லூரி முதல்வர் ச.பூலோகராஜா தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.
நிகழ்வில் கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி இராமசாமி கஜேந்திரா திறன் வகுப்பறையைத் திறந்து வைத்தார். (ரி-13)

# நல்லூர் ஆலய சுற்றுச்சூழல் சுகாதாரப் பிரிவு களத்தரிசிப்பு

யாழ்ப்பாணம், ஓக.5
நல்லூர் ஆலய பெருந்திருவிழா ஆரம்பமாகவுள்ள நிலையில் ஆலயச் சூழலிலுள்ள குடியிருப்புகள் சுகாதாரப் பிரிவினரால் தரிசிக்கப்பட்டன.
இதன்போது நுளம்பு பெருகாத வகையில் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது குறித்தும் அறிவுறுத்தப்பட்டது.
அதேவேளை குடியிருப்பாளர்களின் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றல் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டதுடன் வடிகால்வாய்களும் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன. (ச-17)

# விளையாட்டு விழா

கிளிநொச்சி, ஓக.5
கிளிநொச்சி, கரைச்சி பிரதேச செயலகப் பிரிவுக் குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா கரைச்சி பிரதேச செயலர் த.முகுந்தன் தலைமையில் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் கிளிநொச்சி பதில் மாவட்டச் செயலர் சு.முரளிதரன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ச-45-13)



# மரக்கறி விலையுயர்வு

யாழ்ப்பாணம், ஓக.5
யாழ்.குடாநாட்டில் மரக்கறி வகைகளின் விலை தற்போது சடுதியாக உயர்வடைந்துள்ளது.
விரத நாள்கள் மற்றும் ஆலயத் திருவிழாக்களையொட்டி அவற்றின் விலை எகிறியுள்ளதுடன் பற்றாக்குறையும் நிலவுகிறது.
திருநெல்வேலி சந்தையில் நேற்றைய மரக்கறி விலை நிலைவரப்படி:
கத்தரிக்காய் கிலோ 400 ரூபாவாகவும், பாகற்காய் கிலோ 1000 ரூபாவாகவும் பயிற்றங்காய் கிலோ 800 ரூபாவாகவும் பூசணிக்காய் கிலோ 250 ரூபாவாகவும் மரவள்ளி கிலோ 220 ரூபாவாகவும் வெண்டிக்காய் கிலோ 200 ரூபாவாகவும் கரட் 400 ரூபாவாகவும், பச்சைமிளகாய் 600 ரூபாவாகவும் கீரை ஒருபிடி 100 ரூபாவாகவும் தேசிக்காய் கிலோ 800 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டன. (ச-17)

# மாவைக்கந்தன் தேர்த்திருவிழா!

யாழ்ப்பாணம், ஓக. 5
வரலாற்றுச் சிறப்புமிக்கதும், மிகவும் தொன்மை வாய்ந்ததுமான யாழ்.மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய வருடாந்தக் காம்யோற்சவப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பல்லாயிரக்கணக்கான அடியவர்களின் பங்குபற்றுதலுடன் பக்திபூர்வமாக இடம்பெற்றது.
வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து சண்முகப் பெருமான், விநாயகப் பெருமான் ஆகிய தெய்வங்கள் திருநடனத்துடன் ஆலய உள்வீதியில் உலா வந்து சித்திரத் தேர்களில் ஆரோகணித்தனர்.
இதன்போது அடியவர்கள் பலரும் காவடிகள், அங்கப் பிரதட்சணம் , கற்பூரச் சட்டிகள் எடுத்தும் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர். (ச-66.27)





# கீரிமலையில் பிதிர்க்கடன்

யாழ்ப்பாணம், ஓக.5
ஆடி அமாவாசையையொட்டி நேற்று ஞாயிற்றுக்கிழமை கீரிமலை புனித தீர்த்தத்தில் பல ஆயிரக்கணக்கான மக்கள் தீர்த்தமாடி பிதிர்க்கடன்களை நிறைவேற்றினர்.
நகுலேஸ்வரம் ஆலயம், கீரிமலை தீர்த்தக்கரை பிள்ளையார் ஆலயம் ஆகியவற்றில் சிறப்புப் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.
அதேவேளை ஒதுக்கப்பட்ட சிறப்பு மடங்களில் அன்னதான நிகழ்வும் நடைபெற்றது. (ச-17)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். காரியங்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். செலவுகள் ஏற்படக்கூடும். வியாபாரத்தில் விற்பனை வழக்கம்போல நடைபெறும். பணியாளர்களால் பிரச்சினை ஏற்படும்.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிறுசிறு சங்கடங்கள், வீண் செலவுகளும் ஏற்படக்கூடும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்பு கரையும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். ஆதாயம் கிடைக்கும். விற்பனையும் இலாபமும் கூடுதலாக இருக்கும். ஆதாயம் உண்டாகும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சிலருக்கு தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. உணவு விடயத்தில் கவனம் தேவை.

**சிம்மம்:** எதிர்பார்க்கும் காரியங்கள் சாதகமாக முடியும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும். தேவைகளை நிறைவேற்றி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்தபடி இருக்கும்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். தொலைதூரத்திலிருந்து நீண்டநாள்களாக எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று வந்து சேரும். செலவுகளால் கையிருப்பு கரையும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றை துணிச்சலுடன் எடுப்பீர்கள். வீட்டில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். காரியம் அனுகூலமாக முடியும். மகிழ்ச்சியுடன் வாங்கித் தருவீர்கள்.

**விருச்சிகம் :** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படும். கருத்து வேறுபாடு ஏற்பட்டு நீங்கும். உறவினர்களுக்காக செலவு செய்ய நேரிடும்.

**தனுசு:** மனதில் அவ்வப்போது சஞ்சலங்கள் ஏற்பட்டு நீங்கும். புதிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டாம். உறவுகளால் செலவுகள் ஏற்படும். குழப்பம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் பொறுமை அவசியம்.

**மகரம்:** மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். இளைய சகோதரர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டு வருவார்கள். ஆதாயம் உண்டாகும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. பண உதவி செய்வார்கள். காரியம் அனுகூலமாக முடியும். எதிரிகளால் பிரச்சினை ஏற்படக்கூடும். வியாபாரம் வழக்கம்போலவே காணப்படும்.

**மீனம்:** பொறுமையும் சகிப்புத்தன்மையும் அதிகம் தேவைப்படும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். உறவினர்களால் வீண் மனஸ்தாபம் ஏற்படும். புதிய முயற்சியைத் தவிர்ப்பது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# வனப்புறட்டும் வனங்கள்!

இலங்கையின் வனப்பரப்பின் அளவை மூன்று வீதத்தால் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்திருக்கின்றார் வனவளப் பாதுகாப்பு அமைச்சரான பவித்ரா வன்னியாராச்சி. இதன்படி தற்போது 29 வீதமாகவுள்ள நாட்டின் வனப் பகுதி 2030ஆம் ஆண்டளவில் 32 வீதமாக உயர்த்தப்படும் என்றிருக்கின்றார் அவர். அமைச்சரின் கருத்துகள் செயல்வடிவம் பெறுமானால் ஒரு இலட்சத்து 44 ஆயிரம் ஹெக்ரேயர் நிலப்பகுதிகள் வனப்பகுதிகளாக மாற்றம் பெறும்.

தென்னமெரிக்க நாடுகளுக்கு நிகராக, உலகின் ஆகச்சிறந்த வனக்கட்டமைப்பைக் கொண்டுள்ள நாடுகளில் ஒன்றாக இலங்கை முன்னொரு காலத்தில் அடையாளப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால், இலங்கையின் பொருளாதாரத்தைப் போன்று வருடாவருடம் தேய்ந்துவந்த வனப் பகுதிகள் இன்று ஆபத்தின் விளிம்பில் அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றன. ரயில்பாதைகளை அமைப்பதற்காகவும், விவசாயநடவடிக்கைகளுக்காகவும், புதிய குடியேற்றங்களுக்காகவும், சட்டவிரோத வணிகங்களுக்காகவும் இலங்கையின் காடுகள் கொஞ்சம் கொஞ்சமாக அழிக்கப்பட்டு, இன்று மனித - விலங்குகள் வாழ்விட மோதல்கள் தினம்தினம் ஏற்படும் அளவுக்கு நிலைமை கை மீறியிருக்கின்றது. விளை நிலங்களுக்குள் பன்றிகள் ஊடுருவுகின்றன என்றும், குடியிருப்பு மனைகளுக்குள் யானைகள் அத்துமீறுகின்றன என்றும் நாம் அன்றாடம் முறைப்பட்டுக் கொள்கின்றோம். ஆனால், அதைவிடப் பலமடங்கு அதிகரித்த அத்துமீறலை மனிதர்கள் வன விலங்குகளின் வாழ்விடங்களுக்குள் மேற்கொண்டிருக்கின்றார்கள் என்பதே உண்மை. விலங்குகளின் வாழ்விடங்களுக்குள் நாம் அத்துமீறினால், அவற்றின் உணவு ஆதாரங்களை 'அபிவிருத்தி என்ற போர்வையில்' பறித்துக் கொண்டால், 'தம் பாரம்பரிய இருப்பிடங்களில்' அவை அங்கலாய்த்துத் திரியவே செய்யும். இது எவ்வாறு வனவிலங்குகளின் அத்துமீறல் என்று பொருள்படும்?

புவி வெப்பமயமாதல் மற்றும் பருவநிலை மாற்றம் என்பனவற்றுக்கு எதிரான ஒரு 'முன்னிலைப் போராளியாக' உலக அளவில் தன்னை நிலைநிறுத்திவரும் இலங்கை, மேற்கத்தேய நாடுகளுக்குப் பாடமெடுக்கும் வகையிலும், தன் இருப்பைப் பாதுகாக்கும் வகையிலும் வனத்தின் இருப்பை மேம்படுத்துவதும் பாதுகாப்பதும் தவிர்க்கப்பட முடியாததாகின்றது. இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கையின் வனப் பகுதியை அதிகரிப்பது என்ற அரசாங்கத்தின் முடிவும், அதற்குரிய காலஎல்லை நிர்ணயிக்கப்பட்டமையும் உண்மையில் வரவேற்கப்பட வேண்டியதே. ஆனால், துரதிர்ஷ்டம் என்னவெனில், இலங்கையின் வனப்பகுதியின் இருப்பை உறுதிப்படுத்தல் தொடர்பாகவும், மேம்படுத்தல் தொடர்பாகவும் நாட்டின் வனவளப் பாதுகாப்பு அமைச்சு கருத்துகளை வெளியிடுவது இதுவொன்றும் முதல்முறையல்ல. அமைச்சர் பவித்திராவின் இடத்தில் இதற்கு முன்பிருந்த எத்தனையோ அமைச்சர்கள் இதே கருத்தை திரும்பத்திரும்ப வலியுறுத்தியிருக்கின்றார்கள். ஆனால், 'ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனம் போன்று' வருடாவருடம் வனப்பகுதிகள் சுருங்கிச் செல்கின்றதே அன்றி எந்த நிமிர்வும் - மீளெழுச்சியும் நிகழ்ந்தபாடில்லை. ஒருவேளை அமைச்சர் பவித்திரா அதைச் சாத்தியப்படுத்தினால், அவரின் செயற்றிட்டங்கள் இந்தத் தீவில் நின்றுபேசும். ஏனெனில் வனப்பகுதியை அதிகரிப்பதென்பது இன்று உலகளாவிய சவால்...!



# வாக்குச்சீட்டு அச்சிடல் செலவு மும்மடங்கு!

## அரச அச்சகத் திணைக்களம் தெரிவிப்பு

**கொழும்பு, ஓக.5**

**இம்முறை ஜனாதிபதித் தேர்தலுக்கான அச்சிடும் செலவு மூன்று மடங்காக அதிகரிக்கக்கூடும் என அரச அச்சகத் திணைக்களம் தெரிவித்துள்ளது. கடந்த ஜனாதிபதித் தேர்தலுடன் ஒப்பிடுகையில், வாக்குச்சீட்டு அச்சிடுவதற்கான ஏனைய செலவுகள் அதிகரித்துள்ளன.**

மூலப்பொருள்களின் விலை அதிகரிப்பு மற்றும் வாக்குச்சீட்டுகள் அச்சடிக்கப்படுவதே இதற்குக் காரணம். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அச்சிடப்பட்ட வாக்குச்சீட்டின் நீளம் 27 அங்குலமாக இருந்த நிலையில், இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்ததால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

வாக்குச்சீட்டின் நீளம் அதிகரித்தால் அச்சடிக்கும் செலவு மேலும் அதிகரிக்கலாம் என்றும் அரச அச்சகத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)

## மின்துறை மேம்பாடு

# ஆசிய வங்கியால் 100 மில். டொலர்!

கொழும்பு, ஓக.5

இலங்கையின் மின்சாரத்துறையின் நிதி நிலைத்தன்மையை மேம்படுத்துவதை நோக்கமாகக்கொண்ட சீர்திருத்தங்களுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கி 100 மில்லியன் டொலர் பெறுமதியான கொள்கை அடிப்படையிலான கடனுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த ஒப்பந்தம் அடுத்தவாரம் கையெழுத்திடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டவுடன், மின்சாரத்துறையின் அபிவிருத்திக்காக ஒத்துழைப்புகள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# நீதிமன்ற தீர்ப்பைமீறி பட்டி வலை மீன்பிடி!

முல்லைத்தீவு, ஓக.5

மன்னாரில் நீதிமன்றத் தீர்ப்பையும் மீறி இன்றுவரை தொடர்ச்சியாக சட்டவிரோத 'பட்டி வலை மீன்பிடி இடம்பெற்றுவருகின்றது என்று மன்னார் வங்காலை கிராம மீனவ சங்கத் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(ச-27-20)

# இலங்கைத் தாதியர்; சிங்கப்பூர் உள்ளீர்ப்பு

கொழும்பு, ஓக.5

இலங்கையில் இருந்து அதிகளவான தாதியர்களை நியமிக்க சிங்கப்பூர் எதிர்பார்த்துள்ளதாக சிங்கப்பூர் சுகாதார அமைச்சர் ஓங் யே குங் தெரிவித்துள்ளார். இலங்கையுடன் கூட்டுத்திட்டங்கள், சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்துகொள்வது மற்றும் இலங்கையின் சுகாதார நிபுணர்களுக்கான திறனை வளர்ப்பதற்கான முயற்சியாக இந்த ஏற்பாடு முன்மொழியப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# தேர்தல் விதியை கடைப்பிடியுங்கள்

## ஜனாதிபதி செயலகத்துக்கு அறிவுறுத்து

கொழும்பு, ஓக.5

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவின் பங்குபற்றுதலுடன் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ள பாடசாலை மாணவர்களுக்கான 'சுரக்சா காப்புறுதி' திட்டத்தை புதுப்பிக்கும் வைபவம் ஒன்றை நடத்துவதை தவிர்க்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவிடம் தேர்தல்கள் ஆணையகம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் நிகழ்வை நடத்துவது ஒரு வேட்பாளரை ஊக்குவிப்பதாக அமையும். அதனால் பல்வேறு குழுக்களின் விமர்சனத்துக்குள்ளாகலாம்என்றும் தேர்தல் ஆணையகத் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க கூறியுள்ளார். (ச-இ)

**நாளை**

06.08.2024

செவ்வாய்க்கிழமை - ஆடி - 21

சுபநேரம் : 10.34 - 12.04

ராகுகாலம் : 03.05 - 04.35

மூன்றாம் ஆடிச்செவ்வாய்

**நாளொரு நல்வார்த்தை**


தோல்விகளுக்கு இடையில்தான் வாய்ப்புகள் மறைந்திருக்கின்றன.
அதனால் தோல்விகளைக்கண்டு அஞ்சாதே!

- அல்பேர்ட் ஐன்ஸ்டைன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## ஜெகதீஸ்வரன் நிர்மலா (நிம்மி)



பிறப்பு 27.04.1959 — இறப்பு 03.08.2024

'முருகனகம்' வாளித்தொழிற்சாலை வீதி, பளை, வீமன்காமம் வடக்கு மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், இல 37/22, 1ம் ஒழுங்கை பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெகதீஸ்வரன் நிர்மலா நேற்று முன்தினம் (03.08.2024) சனிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - கமலாதேவி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற **V.K.** அன்னலிங்கம் மற்றும் இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும், ஜெகதீஸ்வரனின் (உரிமையாளர் - இரத்தினாஸ் வைண்டிங் வேக்ஸ்) அன்பு மனைவியும், சஞ்ஜீவன் (சட்டக்கல்லூரி மாணவன்), சோபிகா (அபிவிருத்தி உத்தியோகத்தர் R.D.H.S. முல்லைத்தீவு) ஆகியோரின் பாசமிகு தாயாரும், புவனராணி, சாந்தி, சிவபாலன், உமைபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், யோகேஸ்வரன் (சுவிஸ்), அருளேஸ்வரன் (அன்னலிங்கம் அன் சன்ஸ் - மன்னார்), இராஜேஸ்வரன் (ரட்ணாஸ் மோட்டோர்ஸ் - கிளிநொச்சி), கிரிஜா, விமலேஸ்வரன் (அன்னலிங்கம் அன் சன்ஸ் - மன்னார்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.08.2024) திங்கட்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது மாவிட்டபுரம் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தச்சன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**வாளித் தொழிற்சாலை வீதி**
**பளை, வீமன்காமம்**
**வடக்கு, மாவிட்டபுரம்.**


**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 071 1521, 077 612 2364**

(CR 43059) V-1

# மரண அறிவித்தல்

## தம்பிப்பிள்ளை சின்னத்தம்பி

**(ஓய்வு பெற்ற பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் கிளை முகாமையாளர்-பரந்தன்)**



தோற்றம் 23.03.1937 — மறைவு 04.08.2024

தாமோதரம்பிள்ளை வீதி, சப்பச்சிமாவடியைப் பிறப்பிடமாகவும் மீசாலை கிழக்கு மீசாலையை வதிவிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை சின்னத்தம்பி அவர்கள் 04.08.2024 நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை இலட்சுமி தம்பதியரின் புதல்வரும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் கனகம்மா ஆகியோரின் மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும், விநாயகமூர்த்தி, யோகம்மா, மார்க்கண்டு காலஞ் சென்றவர்களான சின்னத்தங்கம், கணேசு, சறோஜினிதேவி, இரத்தினம், புவனேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் இரவீந்திரன் (ஜேர்மனி), வாசுகி (ஜேர்மனி), வானதி, ரமேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், இந்துமதி, சிவபாலன், சிவநேசன், விஜிதா ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிஷா, லக்ஸன், ஆருஷா, இனுஷ், பிரவீன், பிரன்யா, அனுதரன், துவாரகா, இந்திகா, விதுஷன், விபுலன், துவாரகன், விதுன் றதுஷா, றதுன் ஆகியோரின் அன்புப் பேரனும் அதீரா, அகிஸ் ஆகியோரின் அன்புப் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07.08.2024 (புதன்கிழமை) காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**சிற்றம்பலம் வீதி,**
**மீசாலை கிழக்கு,**
**மீசாலை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 7767917**

(CR 43060) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவையாறு ம. வி.க்கு பஸ்சேவை வேண்டும்

## மாணவர்கள், பெற்றோர் கோரிக்கை

கிளிநொச்சி, திருவையாறு மகா வித்தியாலயத்துக் கான பேருந்து சேவையை நடத்துமாறு பெற்றோ ரால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி பேருந்து சாலையில் இருந்து 5 கிலோமீற்றர் தூரத் தில் மேற்படி பாடசாலை உள்ளது. அங்கு கற்கும் மாணவர்களும், பிற மாவட்டங்களில் இருந்து வருகைதரும் ஆசிரியர்களும் பஸ் சேவை இன்றி நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். இரத்தினபு ரம் வழியாக திருவையாறு மகா வித்தி யாலயம் சென்று இரணைமடுச் சந் தியை அடைந்து, மீண்டும் கிளிநொச் சிக்கு வருகை தரக்கூடிய வகையில் பேருந்து சேவையை நடத்துவதன் மூலம் மாணவர்கள் பயனடைவார்கள். எனவே உரிய அதிகாரிகள் பஸ் சேவை யைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டுமென பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஓ-25-13)



# சேவை நயப்பும் வரவேற்பு நிகழ்வும்

யாழ்ப்பாணம், ஓக.5

கோப்பாய்மத்தி கிராம அலுவலராக சேவையாற்றி, இடமாற்றம் பெற்று கோப்பாய் தெற்குப் பிரிவு கிராம அலுவலராகச் சென்றுள்ள ப.தயாளருபனுக்கு சேவை நயப்பும், கோப்பாய் மத்திக்கு புதிய கிராம அலுவலராகப் பணிப் பொறுப்பு ஏற்றுள்ள திருமதி சு.நித்தியாவுக்கு வரவேற்பு நிகழ்வும் நிறுவுநர் திருமதி சுவர்ணா நவரட்ணம் தலைமையில் கோப்பாய் மத்தி நவமங்கை நிவாசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றன. (ரி-9)

# மரண அறிவித்தல்

பிறப்பு 10 . 04 . 1947

இறப்பு 31 . 07 . 2024



**சுப்பிரமணியம் இரத்தினசிங்கம்**

இணுவிலைப் பிறப்பிடமாகவும், சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இரத்தினசிங்கம் கடந்த (31.07.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.08.2024) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்கான முற்பகல் 10.00 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
மலை வேம்படி லேன்,
சுதுமலை கிழக்கு, மானிப்பாய்.
074 275 6022

(CS/55864) J-1

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**இராஜசிங்கம் நிர்மலாதேவி**

திதி - பிரதமை 05.08.2024

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
ஓராண்டாண்டு சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

தோற்றம் 08.07.1961 மறைவு 18.07.2023


தேவாலய வீதி
சங்கானை
குடும்பத்தினர்.

(CS/55845) J-1

# மரண அறிவித்தல்

பிறப்பு 08 . 08 . 1944

இறப்பு 03 . 08 . 2024



**கனகசபாபதி றதிமதி**

உசனைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபாபதி றதிமதி நேற்று முன்தினம் (03.08.2024) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - சின்னப்பிள்ளை தம்பதியரின் மகளும், கந்தையா - நாகேஸ்வரி தம்பதியரின் மருமகளும், கனகசபாபதி அவர்களின் அன்பு மனைவியும், கிருசாந்தினி, காலஞ்சென்ற கிருசீலன் ஆகியோரின் அன்புத் தாயாரும், விஜயராசாவின் அன்பு மாமியாரும், சாருஜா, டிலோசன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், சுகுணபாலயோகன் (கனடா), காலஞ்சென்றவர்களான வில்லி, பாலேந்திரா (ஓய்வு பெற்ற இ.போ.ச. சாரதி), மற்றும் பாலச்சந்திரன் (வட்டக்கச்சி), ஜெயராணி (உசன்), குலராணி (மட்டுவில்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், விவேகானந்தத்தின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.08.2024) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஈச்சங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உசன்
மிருசுவில்
தகவல்: குடும்பத்தினர்

(CR/43058) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 01 . 1959

மறைவு 02 . 08 . 2024



**கோபாலசாமி (சின்னதுரை) சறோஜினிதேவி (தேவி)**

புங்குடுதீவு 3ம் வட்டாரம் குறிகாட்டுவானை பிறப்பிடமாகவும் 1ம் வட்டாரம் புங்குடுதீவை வசிப்பிடமாகவும் கொண்ட கோபாலசாமி சறோஜினிதேவி அவர்கள் 02.08.2024 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா பாக்கியம் அவர்களின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற தில்லையம்பலம் தங்கமுத்துவின் மருமகளும் கோபாலசாமியின் (முன்னைநாள் பணியாளர் புங்குடு தீவு நயினாதீவு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்) அன்பு மனைவியும் மற்றும் லோகநாதன் (லண்டன்), துரைசிங்கம் (கனடா), காலஞ்சென்ற மகாலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் உதயகுமாரின் (மஞ்சுளா ஸ்ரோர் உரிமையாளர்) அன்பு தாயாரும் மஞ்சுளாவின் பாசமிகு மாமியாரும் புவிஷாந், மகிழினி, தனுஷியா, பவிசனா அவர்களின் அன்பு பேர்த்தியும் மேரி அமலேஸ்வரி (லண்டன்), லீலாவதி (கனடா), சந்திரமலர் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.08.2024 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக புங்குடுதீவு முனையப்புலம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
076 452 7641, 077356 0631

(CS 1077) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் வன்முறைகள் தடுக்க விசேட திட்டம்!


THE ROYAL COLLEGE OF JAFFNA
தனியார் கல்வி நிறுவனம் - சங்கானை.
3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயில
By N. விக்னேஸ்வரன் ஆச்சார்யார் (அரச ஓய்வூதியர்)
குபேரன் கட்டட மாடி, சங்கானை.
424/3, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 077 675 1649
(CS/55857) J-1

கொழும்பு, ஓக. 5

**கடந்த தேர்தல்களில் தேர்தல் வன்முறைகள் இடம்பெற்ற இடங்கள் கண்டறியப்பட்டு பாதுகாப்பை பலப்படுத்த விசேட வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.எல்.ரத்நாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.**

இவ்வாறான 20க்கும் மேற்பட்ட இடங்கள் கண்டறியப்பட்டு அறிக்கை பெறப்பட்டுள்ளது.

எந்தவொரு வாக்களிப்பு நிலையத்திலும் சட்டவிரோதமான செயற்பாடுகள் இடம்பெற்றால் அந்த வாக்களிப்பு நிலையத்தை இரத்துச் செய்யவுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ச-இ)



## மேய்ச்சல் மாடுகளால் பயணத்தில் இடையூறு

யாழ்ப்பாணம், ஓக. 5

வடமராட்சி, பருத்தித்துறை நகரப்பகுதியை அண்மித்த பிரதான வீதிகளில் இரவுவேளைகளில் மாடுகள் படுத்துறங்குவதால் போக்குவரத்தில் அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறை - தும்பளை வீதியில் மெத்தைக்கடை சந்திக்கும் தெருமுடி மடத்துக்கும் இடைப்பட்ட சுமார் 200 மீற்றர் தூரம் வரையான பகுதியை தினசரி இரவு வேளைகளில் மாடுகள் ஆக்கிரமித்து வருகின்றன. மேய்ச்சலுக்காக விடப்படும் மாடுகள் வீடு திரும்பும் வழியில் இவ்வாறு வீதியை ஆக்கிரமிக்கின்றன. இதனால் குறித்த வீதியூடான போக்குவரத்தில் அசௌகரியங்களை எதிர்நோக்குவதுடன் வீதி விபத்துகளும் நேரிடுகின்றன என்றும் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ச-100)

## மீண்டும் 'சுரக்ஷா'

கொழும்பு, ஓக. 5

பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் 'சுரக்ஷா' காப்பீட்டு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

'சுரக்ஷா' காப்புறுதி 4.5 மில்லியன் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. இதற்காக 3 வருடங்களுக்கு 7.1 மில்லியன் ரூபா நிதி அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது. நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்துப் பாடசாலை மாணவர்களும் இந்த வேலைத்திட்டத்தின் மூலம் பயனடையமுடியும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். (ச-இ)

நினைவஞ்சலி
முதலாம் ஆண்டு இரண்டாம் ஆண்டு
மலர்வு 30.12.1942
தோற்றம் 16.02.1951

மறைவு 18.07.2023
மறைவு 28.07.2022
அமரர் இளையதம்பி கிருஸ்ணமூர்த்தி
அமரர் கிருஸ்ணமூர்த்தி புஸ்ப்பம்
இல்லற வாழ்வதை நல்லறமாய் வாழ்ந்து
சொல்லினில் நடத்தையில் தூய்மையும் கொண்டு
மெல்லவே இறையடி எய்திய எந்தையும் தாயுமே!
உங்களின் வாழ்த்துடன் தங்கு சங்களைத்தாய்
எம்முடன் என்றுமே உறுதுணை நிற்கவே!
இல. 349, 16 சிவன் புது வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
077 508 2779
(CS/55868) J-1
குடும்பத்தினர்

2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

உடுவில் கிழக்கு கற்பகப் பிள்ளையார் கோவிலடியைப்
பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட
அமரர் பாலாம்பிகை ஸ்ரீதரன்
திதி - 05.08.2024
தோற்றம் 03.02.1946
மறைவு 29.07.2022
உங்கள் திடீர் மறைவினால் நாங்கள்
திசை மாறிப் போனோம் அம்மா!
ஆண்டுகள் இரண்டு ஆனாலும்
ஆறவில்லை எம் துயரம்
உயிர் தந்து உடல் தந்து கண்ணின்
மணிபோல் காத்தீர்கள்
அதிகமான இன்பம் தந்த நீங்கள்
அதிகமான துன்பத்தையும் தந்து போனீர்களே...
அம்மா என்றும் எம் மனதில்
மறையாது மறக்கவும் முடியாது
காலம் கடந்தும் வாழ்வோம்
உங்கள் ஞாபகங்களுடன்...
தெய்வமாய் வணங்குவோம்
வாழ்வுள்ள நாள்வரை...
பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
(CS/55829) J-1

வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 01.01.1951
உதிர்வு 06.07.2024
அமரர்
சின்னையா டியூக்பல்குணன் லாலா
(ஓய்வு பெற்ற கணித ஆசிரியர்)
அவர்களின் சிவப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (05.08.2024) திங்கட்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறவுள்ளது. பின்னர் **ஆத்ம சாந்திப் பிரார்த்தனை மற்றும் மதியபோசன நிகழ்வுகள் எதிர்வரும் (11.08.2024) ஞாயிற்றுக்கிழமை அன்று நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளது.** அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதமாக கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**
மேலும் எமது குடும்பத்தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து எமது துயர் பகிர நேரில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் அனுதாபச் செய்திகளை தொலைபேசி, குறுஞ்செய்தி, சமூக வலைத்தளங்கள் மூலம் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையங்கள், பதாகைகள் வைத்தவர்களுக்கும், மற்றும் பல்வேறு வகைகளிலும் எமக்கு உதவியாக தோளோடு தோள் கொடுத்து நிற்கும் அனைவருக்கும் எம் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.
பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
(CS/55849) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பொதுவேட்பாளரே தமிழரின் முதன்மைத் தெரிவு

## விக்கி தெளிவுபடுத்தல்

யாழ்ப்பாணம், ஓக. 5

தமிழ்ப் பொதுவேட்பாளருக்கே தமிழ் மக்கள் தமது முதல் வாக்கினை அளிக்க வேண்டும். 2ஆம், 3ஆம் விருப்பு வாக்குகளைப் பயன்படுத்துவது தமிழ் மக்களின் ஜனநாயக உரிமை. இன்னாருக்கு அதனை அளியுங்கள் என்று எந்தத் தருணத்திலும் நான் கூற வில்லை, கூறமாட்டேன் - இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணியின் நாடாளு மன்றஉறுப்பினர்சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரை தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூகங்கள் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தும்போது ஒட்டு மொத்த தமிழ் மக்களும் அந்த வேட்பாளருக்கு தமது வாக்குகளை அளிக்கவேண்டும் என்பதே எனது கோரிக்கை. விருப்பு வாக்கை எவ்வாறு பயன்படுத்துவது என்பது தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைக்கு உட்பட்ட விடயம்.

நான் சில காலத்துக்கு முன்னர் தேர்தலைப் பிற்போட்டால் நாட்டுக்கு நன்மை பயக்கும் என்று கூறியது உண்மை தான். இப்பொழுதும் என்னுடைய அச்சம் இந்த ஜனாதிபதித் தேர்தலின் பின் விளைவுகள். எந்த ஒரு சிங்கள வேட்பாளரினாலும் ஐம்பது சதவிகித வாக்குகளைப் பெற முடியாமல் போகும் பட்சத்தில் நாட்டின் அரசியல் நிலை கவலைக்கிடமாகலாம்.

பல தீய சக்திகள் நாட்டில் குழப்ப நிலையினை ஏற்படுத்த முனையலாம். இன்று சீனா தனது படையை இங்கு அனுப்ப இருப்பதாகச் செய்தி வந்துள்ளது. இது சிறுபான்மையினருக்கு பாதிப்பை ஏற்படுத்தலாம். பொருளாதார நிலையை பெரிதாகப் பாதிக்கலாம். நாட்டின் ஸ்திரத்தன்மை பாதிக்கப்படலாம். வெளிநாட்டு ஊடுருவல்கள் நிலைமையை இன்னும் சீரற்றதாக்கலாம். இவற்றைக் கருத்தில் கொண்டே நான் தேர்தலைப் பிற்போட்டால் நாட்டுக்கு நல்லது என்றேன். அதே நேரத்தில் நாட்டின் நலன் கருதி மூன்று முக்கியமான வேட்பாளர்களும் இதனை எவ்வாறு வழி நடத்துவது என்று கலந்தாலோசிக்கலாம் என்றும் கூறினேன்.

அவ்வாறு கூறியதை மனதில் வைத்துத் தான் சில ஊடகங்கள் நான் ஒரு குறிப்பிட்ட வேட்பாளருக்கு தமிழ் மக்கள் தமது 2ஆவது விருப்பு வாக்கை அளிக்க வேண்டும் என்று கூறியதாக தவறாக செய்தி வெளியிட்டிருக்கின்றார்கள். நாட்டின் நலன் கருதி நான் கூறியதற்கும் தமிழ்ப் பொதுவேட்பாளர் தெரிவில் எனது திடமான முடிவுக்கும் உறவமைத்து கூறியமை பத்திரிகையாளர்களின் ஊகமாகும் - என்றுள்ளது. (ஒ-இ)

## ஓய்வுபெறுகிறார் மருத்துவ நிபுணர்

யாழ்ப்பாணம், ஓக. 5



யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடந்த 11 ஆண்டுகளாக ஓர்தோன்டிஸ் மருத்துவ நிபுணராகப் பணியாற்றியபி.சத்தியகுமார் இன்று ஓய்வுபெறுகின்றார். மருத்துவ துறையில் கடந்த 30 ஆண்டுகளாக இவர் பணியாற்றியுள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முகம் சிதைந்த நோயாளிகளுக்கான சிகிச்சையளிக்கும் (முகம் சீராக்கல்) கிளினிக் இவரால் ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை ஒரு இலட்சத்து 25 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் இவரால் பயனடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-5)

## ஒலிபெருக்கி சாதனம் வழங்கல்

முழங்காவில் மகா வித்தியாலய நிர்வாகத்தினர் விடுத்த கோரிக்கைக்கு இணங்க பாடசாலையின் பழைய மாணவர் பாலச்சந்திரன் உஜாங்கன் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான ஒலிபெருக்கி சாதனங்களை பாடசாலைக்கு வழங்கியுள்ளார். (ஒ-25-13)





## மைதான காணி ஆக்கிரமிப்பு; மீட்டுத்தருமாறு கோரிக்கை

அக்கராயன் மகா வித்தியாலயத்தின் மைதான காணி அடாத்தாகப் பிடிக்கப்பட்டுள்ளதாகவும் அதை மீட்டுத் தருமாறு பாடசாலை நிர்வாகத்தால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்தின்போது அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்துக்கு 6 ஏக்கர் காணி வழங்கப்பட்டது. தற்போது மைதான காணியில் நடப்பட்டு இருந்த எல்லைக் கற்கள் பிடுங்கி எறியப்பட்டுள்ளன. காணி ஆக்கிரமிப்பால் விளையாட்டுப்போட்டிகளை நடத்துவதில் இடப்பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இது தொடர்பாக கரைச்சி பிரதேச செயலாளரிடம் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து அங்கு வருகை தந்த கரைச்சி பிரதேச செயலர் த.முகுந்தன் அடாத்தாகப் பிடிக்கப்பட்டுள்ள இடங்களைப் பார்வையிட்டார். இதன்போது பாடசாலையின் எதிர்கால நன்மைகருதி காணியை மீட்டுத் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாடசாலை நிர்வாகத்தினரால் செயலாளரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. (ஒ-25,13)

பொறுப்பு மருத்துவரின்

## பொறுப்பற்ற செயலாலேயே இளம் தாய் உயிரிழந்தார்

### சுகாதார அமைச்சில் முறைப்பாடு

மன்னார், ஓக. 5

மன்னார் மாவட்ட பொதுமருத்துவமனையில் கடந்த 27ஆம் திகதி இரவு கடமையிலிருந்த பொறுப்பு மருத்துவரின் பொறுப்பற்ற செயலாலேயே இளம் தாய் உயிரிழந்துள்ளார். அந்தப் பெண்ணின் உயிரிழப்புக்கு பொறுப்புக்கூற வேண்டும் என மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் கொழும்பு சுகாதார அமைச்சுக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 27ஆம் திகதி இரவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இளம்தாயை மறுநாளை காலை 7 மணி வரையில் மருத்துவர்கள் பார்வையிடவில்லை. விடுதிக்குப் பொறுப்பான மருத்துவர்கள் தங்கும் விடுதியில் இருந்துள்ளனர். தாதியர்களால் மருத்துவர்களுக்கு அறிவிக்கப்பட்டும் அவர்கள் வரவில்லை.

மருத்துவர்களின் பொறுப்பற்ற செயற்பாட்டால் அவர் உயிரிழந்துள்ளார். மருத்துவமனைகளில் இவ்வாறான பொறுப்பற்ற செயற்பாடுகள் நடைபெறுவது வாடிக்கையாகிவிட்டது. அதுவும் இரவு நேரங்களில் இந்த நிலை தொடர்கின்றது.

இந்தப் பெண்ணின் உயிரிழப்புக்கு பொறுப்புக்கூற வேண்டும். பொறுப்பேற்றல், பொறுப்புக் கூறுதல். பகிர்ந்து கொள்ளுதல் இம் மூன்றும் மருத்துவத் துறையின் அணிகலன்களாக இருக்க வேண்டும்.

இச் சம்பவத்தை திட்டமிட்ட குற்ற மனம் உள்ள கொலையாகக் கருதுகிறோம். பொறுப்பற்ற உத்தியோகத்தர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும்.

குற்றவாளியை குற்றவாளியே விசாரிக்க முடியாது. கங்காரு நீதிமன்ற பொறிமுறையை ஏற்றுக்கொள்ள முடியாது. இதை விசாரணை செய்வதற்கு மருத்துவத்துறை கடந்து சட்டத்துறை சார்ந்தவர்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும். இந்த விசாரணையை மூடி மறைக்காமல் நீதி கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றுள்ளது. (ஒ-[illegible])




புங்குடுதீவு கண்ணகை அம்மன் என வழங்கும்
ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள்
தேவஸ்தானம்
கண்ணகைபுரம்

ஆடிப்பூர உற்சவம் 2024

அன்பார்ந்த அம்பிகை அடியார்களே!

உலக மக்களைக் காத்தருள உலகாளும் அன்னை உமாதேவி அவதரித்த புண்ணிய தினமான ஆடிப்பூரம் எதிர்வரும் குரோதி வருடம் ஆடி மாதம் 22 ஆம் நாள் புதன்கிழமை (07.08.2024) வருவதை முன்னிட்டு அம்பிகை ஆலயத்தில் விசேட பூஜைகள். அபிஷேகம் நடைபெற உள்ளது. எனவே அம்பிகை அடியார்கள் ஆசார சீலர்களாக வருகை தந்து ஆலயத்தில் நடைபெறும் பூஜைகளில் பங்குபற்றி அம்பிகையின் அருளை பெறுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

விவரங்கள்

| | |
|---|---|
| காலை 7.30 மணி | நித்திய பூஜை |
| காலை 9 மணி | ஸ்ரீ வர சக்தி விநாயகர் ஆலயத்தில் இருந்து மங்கள வாத்தியங்கள் முழங்க அடியார்கள் பால்குடம் எடுத்து அம்பிகை ஆலயத்துக்கு வந்து அம்பிகைக்கு பால் அபிஷேகம் செய்யப்பட்டு பின் சபனாபிஷேகம் இடம்பெறும் |
| காலை 11 மணி | மூலஸ்தான அம்பாளுக்கு விசேட பூஜைகள் |
| மதியம் 12 மணி | வசந்த மண்டபத்தில் எழுந்தருளி அம்மனுக்கு ருது சாந்தி வைபவமும் விசேட தீபாராதனைகளும் நடைபெற்று அம்பாள் உள்வீதி உலா இடம் பெறும் |
| பகல் [illegible] மணி | மகேஸ்வர பூஜை ஆகிய அன்னதானம் இடம்பெறும் |

தொடர்புகளுக்கு: 021 3156666 / 0777 174279 ஆலய நிர்வாக சபையினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ் போதனா வைத்தியசாலையில் பல்முகசீராக்கல்
வைத்திய நிபுணராக கடமையாற்றி ஓய்வு பெறும்
மதிப்பிற்குரிய வைத்தியர்

Congratulations

## பரமலிங்கம் சத்தியகுமார்

**BDS (Peradeniya), Ms orthodonics,**
**M.orth R.C.S (Ed in burgh - UK)**

**Consultant Orthodontist Teaching Hospital, Jaffna**

**அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்**

Congratulations

வாழ்த்துவோர்
**றோயல் மெடிக்கல் சென்ரர்**

(CR/43057) J-1


விண்ணக வாழ்வில்

# 31 ஆம் நாள் நினைவாக

05.08.2024



மண்ணில் 08.01.1952 — விண்ணில் 04.07.2024

## முருகேசு முருகானந்தம் அருளானந்தம்

மனமெனும் ஊஞ்சலில் ஆடிடும் எங்களப்பா
கனவிலும் நினைவிலும் களிமுகம் தானப்பா
காலங்கள் நினைவிலும் களிமுகம் தானப்பா
காலங்கள் உருண்டோடி கரைந்தே விட்டாலும்
கண்ணில் நிறைந்திடும் முழுமதி நீங்களப்பா

55/1, டேவிட் வீதி,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

(CS 1002) V-1

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 26 • 09 • 1945 — மறைவு 06 • 07 • 2024

கடந்த 06.07.2024 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த
எமது குடும்பத் தலைவி

## திருமதி விக்னேஸ்வரி குழந்தைவேலு

**(முன்னாள் பிரதி அதிபர்
யா/கொக்குவில் பெரியபுலம் மகா வித்தியாலயம்)**

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (05.08.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும், அத் தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.63/2, கே.கே.எஸ். வீதி,
கொக்குவில்.

குடும்பத்தினர்.
021 222 5662

(CS 1030) A-1



# முருகானந்தா மாணவன் சாதனை

கிளிநொச்சி, ஓக. 5

கிளிநொச்சி முருகானந்தாக் கல்லூரியில் தரம் - 6 இல் கல்வி கற்கும் மாணவன் ஜெராட் பத்மதாஸ் ஜெபில்தாஸ் என்பவர் கிளி.வடக்கு வலய மட்ட கணித வினாடி வினாப் போட்டியில் வெற்றிபெற்று மாகாணப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் கடந்த ஏப்ரல் மாதத்தில் கணித ஒலிம்பியாட் தேசியமட்டப் போட்டியிலும் பங்கு கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-22-13)

# இரண்டாம் ஆண்டு நினைவு



தோற்றம் 10 • 11 • 1955 — மறைவு 05 • 08 • 2022

## அமரர் திருமதி துரைராசா மகேந்திரராணி

மனமெனும் ஊஞ்சலில் ஆடிடும் எங்களம்மா
கனவிலும் நினைவிலும் களிமுகம் தானம்மா
காலங்கள் உருண்டோடி கரைந்தே விட்டாலும்
கண்ணில் நிறைந்திடும் முழுமதி நீங்களம்மா

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



பிறப்பு 14 • 02 • 1942 — இறப்பு 04 • 08 • 2024

## முத்துக்குமாரு சுந்தரமூர்த்தி

யாழ். உரும்பிராய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரு. முத்துக்குமாரு சுந்தரமூர்த்தி அவர்கள் நேற்று (04.08.2024) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - பத்மாவதி தம்பதியரின் அன்பு மருமகனும், சகுந்தலா அவர்களின் அன்புக் கணவரும், சித்திரகலா (சுவிஸ்), கீதாஞ்சலி (சுவிஸ்), பிரஷாந்தினி (சுவிஸ்), சுபாஷினி (சுவிஸ்), ஷர்மிளா, கஜேந்திரவரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவானந்தன் (சுவிஸ்), ரவீந்திரகுமார் (சுவிஸ்), சிவனேஸ்வரன் (சுவிஸ்), அன்ரன் ஜெரோம் (சுவிஸ்), குகபரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கீர்த்தனன், நிலானி, ஹரி, ஷாம்பவி, ஹரிஷான், பிரஷான், ஷரண், ஹர்ஷனி, ஹரிஷங்கர் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, பரமேஸ்வரி, ஜெயரட்ணம், சுந்தரலிங்கம், புவனேஸ்வரி மற்றும் யோகலிங்கம், மகேஸ்வரி, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சீவரட்ணம், நவரட்ணம், புவனேஸ்வரி, கமலாதேவி மற்றும் ராஜதுரை, யோகேஸ்வரி, துரைராஜசேகரம், இந்திராதேவி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (05.08.2024) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**

சிவகுல வீதி,
(முத்துக்குமாரு ஒழுங்கை)
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

| | |
|---|---|
| சித்திரா | - +41789146369 - வட்ஸ்அப் |
| கீதா | - +41788781855 - வட்ஸ்அப் |
| பிரியா | - +41789206128 - வட்ஸ்அப் |
| சுபாஷனி | - +41762087477 - வட்ஸ்அப் |
| ஷர்மிளா | - 071 5287 864 - வட்ஸ்அப் |

(CS 1015) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 207 கிலோ கஞ்சா மீட்பு

கிளிநொச்சி, ஓக. 5

இரணைதீவுக் கடற்கரையில் ஒளித்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 207 கிலோ கஞ்சாவை கடற்படையினர் மீட்டு முழங்காவில் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதேவேளை நேற்றுமுன்தினமும் 176 கிலோ கஞ்சா வலைப்பாடு கடற்பகுதியில் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-113)

# உணவுத் திருவிழா இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 5

யாழ். மாவட்டச்செயலகம் நடத்தும் உணவுத் திருவிழாவும் விற்பனைக் கண்காட்சியும் இன்று திங்கட்கிழமை மாலை 3 மணியளவில் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இன்று இரவு 9 மணிவரை முதலாம் நாள் நிகழ்வு இடம்பெறவுள்ளது. நாளை செவ்வாய்க்கிழமையும் நாளை மறுதினம் புதன்கிழமையும் முற்பகல் 10 மணி முதல் இரவு 9 மணி வரையும் இடம்பெறும். மூன்று தினங்களிலும் மாலை மற்றும் இரவு வேளைகளில் கலாசார மற்றும் இசை நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (ஒ-66)

# சதுரங்கத்தில் 21 மாணவர்கள் வெற்றி

மன்னார், ஓக. 5

இலங்கைப் பாடசாலைகள் சதுரங்க சம்மேளத்தினால் நடத்தப்பட்ட மாகாணமட்ட ஒற்றையர் சதுரங்கப் போட்டிகளில் மன்னார் மாவட்டத்தில் 21 மாணவர்கள் தேசிய மட்டத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இலங்கைப் பாடசாலைகள் சதுரங்க சம்மேளத்தினால் கிளிநொச்சியில் மாகாணமட்ட ஒற்றையர் சதுரங்கப் போட்டிகள் கடந்த சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இடம்பெற்றன. (ப-60)

## நிபந்தனைகளுடன்...

கொழும்பில் நேற்று நடைபெற்றது.

இதன்போது ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கட்சி எடுக்க வேண்டிய தீர்மானங்கள் பற்றி விரிவாக ஆராயப்பட்டு, உயர்பீட உறுப்பினர்களின் கருத்துகள் கோரப்பட்டன.

இதன் அடிப்படையிலேயே ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளரான சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிக்கும் முடிவை முஸ்லிம் காங்கிரஸ் எடுத்துள்ளது.

"எம்மால் முன்வைக்கப்படும் நிபந்தனைகள் சஜித்தின் வெற்றியைப் பாதிக்காது, அதேபோல சஜித்தால் ஏற்றுக்கொள்ளக் கூடிய விடயங்களாக அவை அமையும்" என்று மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலில் தமது கட்சி யாருக்கு ஆதரவு என்பதை ரிஷாட் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் இவ்வாரம் அறிவிக்கவுள்ளது. (அ-ஒ-44)

## வீட்டாரை...

பிடித்துள்ளனர். இருப்பினும் கொள்ளையர்கள் தப்பிச்சென்றுள்ளனர்.

கிளிநொச்சி - தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உழவனூரில் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குடும்பத் தலைவர் வெளியில் சென்றிருந்த நிலையில், 15பேர் கொண்ட வன்முறைக்கும்பல் வீட்டுக்குள் புகுந்துள்ளது. வீட்டிலிருந்த பெண்களை மிரட்டி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிப்பரை பலவந்தமாக அங்கிருந்து, வீட்டின் மதிலையும் உடைத்துக் கொண்டு சென்றுள்ளனர்.

உடனடியாக தருமபுரம் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டது. தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் டிப்பர் பயணிப்பதாக கிடைத்த தகவலுக்கு அமைவாக அதனைத் துரத்திச் சென்று பிடித்துள்ளனர். டிப்பரைக் கொள்ளையடித்துச் சென்றவர்கள், டிப்பரையும், 4 மோட்டார் சைக்கிளையும் அங்கேயே போட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். அவற்றை மீட்டுள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ஒ-113)

## மூவரை...

சூடு இடம்பெற்றுள்ளது. கரடுகல உப பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ்காரர் ஒருவரை சுட்டுக்கொன்றுவிட்டு, நாமலோயா பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற கொலையாளியான பொலிஸ்காரர், தனது மனைவி, மாமியாரை தொலைபேசியில் அழைத்துள்ளார். அவர்கள் பொலிஸ் நிலையத்துக்கு அருகில் வந்தபோது அவர்களையும் சுட்டுக்கொன்றுவிட்டு தப்பியோடிவிட்டார். பின்னர் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகக் கூறப்படும் பொலிஸ் கொன்ஸ்டபிள் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

முறைதவறிய காதல் விவகாரத்தாலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிய வருகிறது. (அ-ஒ-இ)

## 4 தலைவர்களை...

பத்திரண ஆகியோர் மாவட்டத் தலைவர் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

இதேவேளை - அநுராதபுரம் மாவட்ட தலைவராக பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் பொதுஜன பெரமுனவின் கம்பஹா மாவட்டத் தலைவராக இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த, மாத்தறை மாவட்டத் தலைவராக நிபுண ரணவக்க, காலி மாவட்டத் தலைவராக மொஹான் டி சில்வா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (அ-ஒ-இ)

## கை, கால்கள்...

விசாரணைகளுக்காக அழைத்துள்ளனர்.

அளவெட்டியைச் சேர்ந்த சசிரூபன் நிகாஸ் என்ற 45 நாள் குழந்தை நேற்றுமுன்தினம் உயிரிழந்திருந்தது.

தாய்ப்பால் கொடுத்த பின்னர் குழந்தை அசைவற்றுக் கிடந்ததாக தாய், குழந்தையை அளவெட்டி மருத்துவமனைக்கு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கொண்டு சென்றுள்ளார். குழந்தையை அங்கிருந்து தெல்லிப்பழை மருத்துவமனைக்கு மாற்றியபோது, குழந்தை உயிரிழந்துள்ளதை அங்கிருந்த மருத்துவர்கள் உறுதிப்படுத்தினர். குழந்தையின் உடலில் காயங்கள் காணப்பட்டமையால், உடற்கூற்றுப் பரிசோதனை நேற்று ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது குழந்தையின் கைகள் மற்றும் கால்கள் முறிந்து இருந்தமை, தலையில் அடிகாயங்கள் காணப்பட்டமை சிரி ஸ்கான் ஊடாகக் கண்டறியப்பட்டது. அத்துடன் உடலில் கண்டல் காயங்களும் காணப்பட்டுள்ளன. குழந்தையின் உயிரிழப்பு இயற்கையானது அல்ல எனவும் குழந்தையின் தலையில் உள்ள மிகப்பெரிய காயம் காரணமாகவே இறப்புச் சம்பவித்துள்ளதாகவும் உடற்கூற்று பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குழந்தையைத் தான் கொலை செய்யவில்லை எனவும், குழந்தை பால் குடிக்க மறுத்தமையால் கைகள், கால்களைத் திருகினேன் எனவும் தாய் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி மற்றும் பொலிஸாரின் விசாரணையில் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

குழந்தையின் தந்தை வெளியூரில் தங்கி இருந்து வேலை செய்வதாகவும், தாயின் பராமரிப்பிலேயே இந்தக் குழந்தையும், ஒரு வயதுள்ள மற்றொரு குழந்தையும் இருந்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ-ஒ-20-26)

## தமிழ்ப்...

சிவில் அமைப்புகளின் ஒருங்கிணைவுடன் உருவாக்கப்பட்ட தமிழ் மக்கள் பொதுச்சபையின் ஏழு பிரதிநிதிகளும் தமிழ்த் தேசிய அரசியல்கட்சிகள் ஏழினது பிரதிநிதிகளும் கூட்டிணைந்து தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பை உருவாக்கியிருந்தனர்.

இந்தப் பொதுக்கட்டமைப்பு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தமிழ்ப் பொதுவேட்பாளரைக் கண்டறிவதற்கு உப குழுவை நியமித்திருந்தது. அந்தக் குழு பல்வேறு தரப்புகளுடனும் பேச்சு நடத்தியிருந்தது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பா. அரியநேந்திரன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கே.வி. தவராசா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சந்திரநேரு சந்திரகாந்தன் ஆகியோரது பெயர்களே இறுதிப் பட்டியலில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இன்றைய தினம் தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பின் சந்திப்பு யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சந்திப்பின் பின்னர் தமிழ்ப் பொதுவேட்பாளர் தொடர்பாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவுள்ளது. (அ-ஒ-5-26)

## பொலிஸ்மா...

கள் இல்லை என்பதை எடுத்துரைத்த சபாநாயகர், அவ்வாறான சூழ்நிலையில் தாம் எந்தவொரு கலந்துரையாடலிலும் ஈடுபடப்போவதில்லை எனவும் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபராகக் கடமையாற்றுவதைத் தடுக்கும் இடைக்கால உத்தரவை உயர் நீதிமன்றம் அண்மையில் பிறப்பித்தது.

இதனைத் தொடர்ந்து, பொலிஸ்மா அதிபர் தொடர்பான பிரச்சினைக்கு பிரதம நீதியரசர் மற்றும் சபாநாயகர் இடையில் பேச்சு நடத்தி தீர்வுகாண வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்த நிலையிலேயே, பொலிஸ்மா அதிபர் விவகாரம் தொடர்பில் பிரதம நீதியரசருடன் கலந்துரையாடப் போவதில்லை என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)

## 5 புலம்பெயர்...

செய்வதுடன் சர்வதேசமயப்படுத்தமுடியும் என நம்புவதாகவும் 5 புலம்பெயர் தமிழர் அமைப்புகள் கூட்டாகத் தெரிவித்துள்ளன.

தமிழ்ப் பொதுவேட்பாளர் குறித்த அறிவிப்பு இன்று வெளியாகவுள்ள நிலையில், இதுகுறித்து தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி உலகத் தமிழ் அமைப்புகளின் பேரவை, வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை, இலங்கைத் தமிழ்ச்சங்கம், ஒருங்கிணைந்த தமிழ் அமெரிக்கர்கள் அரசியல் நடவடிக்கைக்குழு மற்றும் உலகத்தமிழ் அமைப்பு ஆகிய 5 புலம்பெயர் தமிழர் அமைப்புகள் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளன. (அ-ஒ-இ)

## இளைஞனின்...

டுள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை மாலை தாஸ்நகரில் வீடொன்றில் இளம் குடும்பத்தலைவர் தூக்கில் தொங்கிய நிலையில் அயலவர்களால் மீட்கப்பட்டிருந்தார்.

உடனடியாக மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டபோதும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டாரெனத் தெரிவிக்கப்படுகின்றது.

விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் சாவில் சந்தேகம் இருப்பதாக அறிக்கையிட்டதையடுத்து, சடலத்தைப் பார்வையிட்ட நீதிவான் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டுள்ளார். (அ-ஒ-110)

**ரயர் வேலைக்கு ஆள் தேவை**

சங்கானையில் அமைந்துள்ள ரயர் கடைக்கு வேலையாள் தேவை.

077 621 6690, 076 418 9010

**வேலையாள் தேவை**

எமது கால்நடை உற்பத்தி விற்பனை நிலையத்திற்கு ஆண், பெண் வேலையாட்கள் தேவை. ஆண் (Light Vehicle Licence Auto, Motor Cycle உட்பட) ஒய்வு பெற்றவர்களும் விரும்பத்தக்கது.

JAFFNA EGG CENTER

075 258 9665, 077 851 1265

**உதவி அர்ச்சகர் தேவை**

நகரில் உள்ள சிவாலயம் ஒன்றிற்கு பிராமண உதவி அர்ச்சகர் தேவை


தொடர்புகளுக்கு

077 869 2341, 074 0180 236

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு
27
.
10
.
1938



இறப்பு
02
.
08
.
2024

## சின்னத்தம்பி நாகராஜா

(இளைப்பாறிய அதிபர்)

யாழ். அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நாகராஜா கடந்த (02.08.2024) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - நாகம்மா தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான படைவீரசிங்கம் - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் அன்னார் காலஞ்சென்ற விமலேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சூரியபாலன் மற்றும் சந்திரபாலன், கிரிசா, சுபலதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவஜோதி, சிவனேஸ்வரன், வதனன் ஆகியோரின் அன்பு மாமனாரும், றமீயா, விதூஷா, துவாரகா, சிந்துஜன், கரன்யா, மயூறிக்கா, ஜதுஷன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான இரத்தினம், செல்லம்மா மற்றும் இராசையா, காலஞ்சென்ற செல்லத்துரை ஆகியோரின் அன்புச் சகோரதனும், காலஞ்சென்றவர்களான இராசநாயகி, சின்னையா, நவமணி, குகவீரசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.08.2024) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
தொடர்பு: +94 773 346 877
+44 797 692 2136 (மகன்)

வாழ்க
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

(CS 55851) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
28
.
03
.
1936



மறைவு
01
.
08
.
2024

## ஆறுமுகம் தனேஸ்வரி

கரவெட்டி மேற்கு

பிராமணன் தோட்டம் கரவெட்டி மேற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், கனடா நாட்டினை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் தனேஸ்வரி கடந்த (01.08.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - மீனாட்சி தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை ஆறுமுகம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வன்னியசிங்கம் மற்றும் தனபாலசிங்கம், பூபாலசிங்கம், காலஞ்சென்ற ஜெயபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற வள்ளியம்மை மற்றும் கந்தசாமி, சிவகாமி, சரஸ்வதி ஆகியோரின் மைத்துனியும், கிருஷ்ணமூர்த்தி (கனடா), லோகநாதன் (அமெரிக்கா), சிவநாதன் (டென்மார்க்), கணநாதன் (கனடா), வசந்தி (கனடா), இரகுநாதன் (சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் மாவட்ட செயலகம் - மன்னார்), சண்முகநாதன் (ஆசிரியர்), சாந்தமூர்த்தி (இலண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், துளசி (கனடா), ஜெயசிறி (அமெரிக்கா), உதயகுமாரி (டென்மார்க்), சுகுணா (கனடா), மோகனசுந்தரம் (கனடா), குமுதினி, சுதர்ஷனி, சுதாஜினி (இலண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சத்தியதேவி, ஈஸ்வரன், ராதிகா ஆகியோரின் உறவு முறை மாமியும், வதனி, காலஞ்சென்ற யோகராணி ஆகியோரின் பெரிய தாயாரும், பாலசுந்தரம், ஜெயவர்மன் (கனடா), சிவநேசன் (ஆசிரியர்) ஆகியோரின் பெரியம்மாவும், துசானி, கௌதம், நிரூசன், பிரவீன், சாரங்கி, சாரங்கன், சாருகன், ஆதவன், ஆரணி, மதுஷன், லக்ஷன், மாதங்கி, அகரன், சாகித்தியா, தர்ஷிக்கா, கௌசிக், கர்ஷன் ஆகியோரின் பேர்த்தியும், சரண், இயான், காவியா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (05.08.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் (கனடா நேரம்) கனடா நாட்டில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
076 947 6397

(CS/55868) J-1

# ஓராண்டு நினைவஞ்சலி

அமரர்

## தம்பிராசா தருமரத்தினம்

(உரிமையாளர் -
சென்றல் மோட்டோர்ஸ் - யாழ்ப்பாணம்,
சாங்கர் மோட்டோர்ஸ் - சுன்னாகம்)

திதி - பூர்வபட்ச பிரதமை



எங்கள் குடும்பத்தின் ஆணிவேரே!
கண்மூடி முழிக்கும் முன்னே
ஓராண்டு உருண்டோடி விட்டது - தெய்வமே!
என்றும் எம்முடன் இருப்பீர்கள் என எண்ணி
கனவுகள் பல கண்டு இருந்தோம்
இடைநடுவே எமைத் தவிக்கவிட்டு
ஏன் தெய்வமே சென்று விட்டீர்கள்
காலன் உங்களை காலத்தால் அழைத்த வேளை
கதிகலங்கி நின்றோம்.
அத்துன்பத்தை ஏற்றுக்கொள்ள
இன்று வரை எம்மால் முடியவில்லை.
விதி செய்த சதி தானோ என்று எம்மனம்
எண்ணினாலும் அதை ஏற்றுக்கொள்ள முடியாது
நாங்கள் வெதும்பித் தவிக்கிறோம்
எங்களுக்கு வரமாக கிடைத்த ரத்தினமே
எம் வாழ்வு உள்ளவரை எம் சிந்தையிலே
அழியாத கம்பீரத் தோற்றத்துடன் எம் மூச்சில்
கலந்து இருப்பீர்கள்!
இன்னொரு பிறவி இருப்பது உண்மையெனில்
அப்போதும் நீங்களே எங்கள் வீட்டு தலைவனாக
வரவேண்டும் என்ற வரத்தையே வேண்டி நிற்கின்றோம்.

மலர்வு
17.05.1957

உதிர்வு
18.07.2023

கீரிமலை வீதி,
சண்டிலிப்பாய் மத்தி

குடும்பத்தினர்
077 664 2897

(CS/55865) J-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111
விளம்பரம்: advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org